| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 07/05/2022 | முதல் | 11/05/2022 | |
| அறிக்கை எண் : | 036/ 2022 | வெளியீட்டு நாள் : | | 06/05/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39° - 40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (02.05.2022 முதல் 05.05.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 11-05-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 02/05 | 03/05 | 04/05 | 05/05 | தேதி | நாள்-2 07/05 | நாள்-2 08/05 | நாள்-3 09/05 | நாள்-4 10/05 | நாள்-5 11/05 |
| 1.7 | 0.0 | 0.8 | 18.8 | மழை (மி.மீ) | 6 | 6 | 0 | 0 | 4 |
| 40 | 40 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 36 | 36 | 36 |
| 26 | 27 | 28 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 26 | 26 |
| 3 | 4 | 5 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 4 | 3 | 3 |
| 55 | 63 | 59 | 67 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 65 | 65 | 65 |
| 36 | 35 | 52 | 40 | | 50 | 50 | 45 | 45 | 45 |
| 2 | 6 | 8 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| தென் கிழக்கு | கிழக்கு | தென்மே மேற்கு | வட கிழக்கு | **காற்றின் திசை** | வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 7, 8 மற்றும் 11 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், வடமேற்கு மற்றும் மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்த து வாரத்திற்கான ன விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (06- 12 மே 2022) :

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைந்த அளவு மழைப் பொழிவு காணப்படும்.

**அதிகபட்ச ஙி வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச ஙி வெப்பநிலையானது பொதுவாகக இயல்பை ஒட்டியே
காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச ஙி வெப்பநிலை :**

குறைந்தபட்ச ஙி வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பாக காணப்படும். 20° செல்சியஸ் முதல் 26° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 07.05.2022 மற்றும் 08.05.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாககொட்டகைகளில் கட்டி வைக்கும் படியும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**வெப்பநிலை எச்சரிக்கை:**

தமிழகத்தில் அடுத்த 2 நாட்களுக்கு (07.05.2022 & 08.05.2022) உயர்ந்தபட்ச வெப்பநிலையானது இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும். கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள் : பருத்தி, மக்காச்சோளம், கால்நடை.**

### பருத்தி:

- தற்போது நிலவும் சூழ்நிலையில் பருத்தி பயிரில் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் பிரச்சினை ஆங்காங்கே காணப்படுகிறது.
- இதனை சரி செய்ய, பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள பருத்தி பயிரில் ஒரு ஏக்கருக்கு 2½ கிலோ என்ற அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பருத்தி பிளஸ் எனும் வளர்ச்சி ஊக்கியினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.
- இதன் மூலம் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் குறைகிறது, காய் வெடிக்கும் தன்மை அதிகரிக்கிறது,
- பருத்தி விதை விளைச்சல் அதிகரிக்கிறது. மேலும் இது பருத்திச் செடிக்கு, வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும் கொடுக்கிறது.

### மக்காச்சோளம்:

- தற்போது நிலவும் பருவ நிலையில் மக்காச்சோளம் பயிரில் குருத்து ஈதாக்குதல் பரவலாக தென்படுகின்றது.
- இதன் புழுக்கள் இலையுறைக்கும், தண்டிற்கும் இடையே குடைந்து சென்று நடுக் குருத்தை தாக்குகிறது.
- ஒரு எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் மீன் இறைச்சிப் பொறியினை அமைத்து குருத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.

- இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100 மில்லி என்ற அளவில் குளோரோட்ரானிப்ரோல் மருந்தினை தண்ணீரில் கலந்து மழை இல்லாத நாட்களில் தெளிக்கவும்.

**கால்நடை:**

- தற்போது நிலவி வரும் அதிக வெப்பம் காரணமாக கால்நடைகளில் உண்ணிகளின் தாக்குதல் காணப்படலாம்.
- இந்த உண்ணிகள் நோய் தாக்கம் கண்ட மாடுகளின் இரத்தத்தை உறிஞ்சிய பிறகு மற்ற மாடுகளையும் கன்றுகளையும் கடிப்பதன் மூலம் காமாலை நோய், நீரழிவு நோய் போன்ற நோய்கள் பரவ அதிக வாய்ப்புகள் உள்ளது.
- இதனை கட்டுப்படுத்த உண்ணி தடுப்பு மருந்துகளை மாட்டின் உடம்பில் தடவுவதோடு மட்டுமல்லாமல் மாட்டுத் தொழுவத்திலும் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.